புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed
ISSN : 2456-821X
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/02 - March 2023

===========================================================================

# அர்த்தநாரி புதினத்தில் நாட்டாரியல் சடங்குகள்

===========================================================================

**ஆய்வாளர்**

*சு.திருக்குமார்,*

*முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதிநேரம்),*

*ஸ்ரீமத் ஆண்டவன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி),*

***(பாரதிதாசன் பல்கலைக் கழகத்துடன் இணைவு பெற்றது)***

*திருவானைக்கோவில் ,திருச்சிராப்பள்ளி -05.*

===========================================================================

**முன்னுரை**

பெருமாள் முருகன் நவீன இலக்கியப் படைப்பாளிகளுள் குறிப்பிடத்தக்கவர். இன்றைய இலக்கிய உலகில் இவருக்கென்று தனித்த புகழ் உண்டு. காலச்சுவடு இதழில் தொடர்ந்து எழுதியும், படைப்புத்துறையில் தனித்து இயங்கியும் வருபவர். இவர் புதினங்கள், சிறுகதைகள் கவிதைகள், கட்டுரைகள் என்று பல படைப்புகளைப் படைத்துள்ளார். இவருடைய புனைவுகள் பெரும்பாலும் நாட்டுப்புற மக்களின் வாழ்வியலைப் பிரதிபலிப்பவையாக அமைந்துள்ளன. நாட்டுப்புறப் பழமொழிகள், கதைகள், பாடல்கள், நம்பிக்கைகள், சடங்குகள், மருத்துவங்கள், வட்டாரவழக்குச் சொற்கள் மற்றும் புழங்கு பொருள்கள் குறித்த செய்திகள் இவருடைய படைப்புகளில் பொதிந்து கிடக்கிறது. அந்தவகையில் இவருடைய அர்த்தநாரி புதினத்தில் காணப்படும் நாட்டாரியல் சடங்குகளும் அதன் வழி பெறப்படும் பண்பாட்டுப் பதிவுகளையும் எடுத்துரைப்பதே இவ்வாய்வின் நோக்கமாக அமைகிறது. இவ்ஆய்வுக் கட்டுரை வழிபாட்டு முறைச் சடங்குகள், திருமணச் சடங்குகள், வளைக்காப்புச் சடங்குகள், பிள்ளைப்பேற்றுச் சடங்குகள், காதணிவிழாச்

*சடங்குகள், கண்ணேறு கழித்தல் சடங்குகள், பொங்கல்விழாச் சடங்குகள், இறப்புச் சடங்குகள் என்பனவாக பகுத்துக் கொள்ளப்படுகிறது.*

***சடங்குகள்***

*நாட்டுப்புற மக்கள் நாடோடி வாழ்க்கையையும் இயற்கையோடு இயைந்த வாழ்வியலையும் வாழ்ந்து வந்துள்ளனர். இயற்கையால் மனிதனுக்குக் கிடை.த்த நன்மையின் காரணமாகவும், இயற்கையால் ஏற்படும் துன்பத்தின் மூலமாக வெளிப்படும் பயத்தின் காரணமாகவும் மனிதன் சில செயல்களை செய்துவந்தான். இந்தக் குறிப்பிட்ட செயல்கள் தொடர்ந்து மக்களால் பின்பற்றப்படும் போது அவை சடங்குகள் என்று பெயர் பெறுகின்றன. மனிதனுடைய பிறப்பு முதல் இறப்பு வரை மற்றும் இறப்பின் பின்னும் சடங்குகள் நிறைந்து காணப்படுகின்றன. "சடங்கென்பது நிர்ணயிக்கப்பட்ட விரிவான நடத்தைகளின் வடிவமாகும். இது தனிமனிதனின் இயல்பான ஆக்கமாகவோ பண்பாட்டினுடைய தனிச்சிறப்புக் கூறாகவோ அமையும். பண்பாட்டின் ஏனைய அம்சங்கள் இன்றிச் சடங்குகளிலேயே வெவ்வேறு நாகரிகங்களின் நம்பிக்கைகளும் இலட்சியங்களும் மிகத் தெளிவாக வெளிப்படுத்தப்படுகின்றன"[1] என்று சடங்கு குறித்து விளக்கம் தருகிறார் ரூத்பெனிடிக். "புனிதப் பொருள்களின் முன்னால் மனிதன் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் எனக்கூறும் ஒழுக்கவிதிகளே சடங்குகள்"[2] என்கிறார் டூர்கைம். "சடங்கு என்பது சாஸ்திரவிதி பற்றியும், வழக்கம் பற்றியும் அனுஷ்டிக்கும் கிரியை"[3] என்கிறது தமிழ்ப் பேரகராதி என்று சு.சக்திவேல் தம் நூலில் குறிப்பிடுகிறார். மேற்கண்ட அறிஞர்களின் கூற்றை நோக்கும் போது சடங்குகள் என்பவை குடும்பம் தழைக்கவும், துன்பங்கள் விலகி நலமுடன் வாழவும், பயத்திலிருந்து விடுபடவும், பழிபாவங்களைப் போக்கிக் கொள்ளவும், நோயின்றி நலமுடன் வாழவும் செய்யப்படுபவை ஆகும். இச்சடங்குகள் முழுக்க முழுக்க நம்பிக்கையின் பாற்பட்டவையாகும்.*

**வழிபாட்டு முறைச் சடங்குகள்**

*தெய்வ வழிபாட்டில் பெருந்தெய்வ வழிபாடு, சிறுதெய்வ வழிபாடு என இரண்டு விதமான வழிபாட்டு முறைகள் உள்ளன. நாட்டுப்புற மக்கள் பெரும்பாலும் சிறுதெய்வ வழிபாடுகளைக் கொண்டவர்களாக இருப்பார்கள். அவர்களுக்கென்று ஊர்தெய்வம், காவல்தெய்வம் இருக்கும். இச்சிறுதெய்வத் திருவிழாவை நடத்துவதற்கு முன்பு சகுனம் கேட்டல் என்ற சடங்கு நடைபெறும். குறிப்பிட்ட நல்ல நாளில் கோவிலில் உட்கார்ந்து சகுனம் கேட்பார்கள். கோவிலில் அவர்கள் குறித்த திசையில் பல்லி ஒலியெழுப்பினால் தெய்வமே சகுனம் கூறியதாக திருவிழா கொண்டாடுவதற்கு நாள் குறிப்பார்கள். திருவிழாக்கள் தொடங்கும்வரை யாருடைய வீட்டிலும் கறி உணவு சமைக்கக் கூடாது. திருவிழாக்கள் மூன்று நாள்கள், பத்து நாள்கள், இருபது நாள்கள், முப்பது நாள்கள் என்று நடக்கும். திருவிழாக்களில் கூத்துகள், கலை நிகழ்ச்சிகள் என்று நடைபெறும். அர்த்தநாரி*

புதினத்தில் ஆசிரியர் கறிநாள் முறையை "கரட்டூர் நோம்பி மக்களுக்கு மூன்று மாதம். மாசி பிறந்ததும் நோம்பித் தயாரிப்பு தொடங்கிவிடும். பங்குனி, சித்திரை வரைக்கும் தூரிகைகளும் கடைகளும் இருக்கும். ஆனால் நோம்பி நிகழ்ச்சிகள் என்னவோ இருபத்திரண்டு நாட்கள்தான். பெருவாரியான மக்களுக்கு இருபத்தி மூன்றாம் நாள் கறிநாள்." (அர்த்தநாரி,ப.23.) என்று எடுத்துரைப்பதன் வழி அறிய முடிகிறது. மக்கள் கோவிலுக்கு நடந்தோ அல்லது வண்டிமாடு கட்டிக்கொண்டோ செல்வார்கள். மாடுகளுக்குத் தேவையான உணவுகளை வண்டியிலே கட்டிக்கொண்டு செல்வார்கள். இரண்டு மூன்று நாட்கள் கோவிலிலேயே தங்கி தெய்வத்திற்கு சேவலோ, கிடாயோ அறுத்துப் பலியிட்டு அங்கேயே உண்டுவிட்டு வருவார்கள்.இக்கருத்தினை,

"நடையாகவும் மாட்டுவண்டிகளிலுமாக ஊரெங்கும் இருந்து மக்கள் செல்லும் காட்சி படையெடுப்பு போலத் தோன்றும். சேவல்களைக் கொண்டு வந்து அடுத்தநாள் பூச்சிசாமிக்கு அறுத்து அங்கேயே ஆக்கிச் சாப்பிட்டு விட்டுத்தான் வண்டியைக் கட்டுவார்கள்."(அர்த்தநாரி,ப.24.) என்று கூறுவதன் வழி இச்சடங்கு முறையைக் காண முடிகிறது. மேற்கண்ட கருத்தினை நோக்கும் போது கோவிலிலிருந்து உணவை எடுத்து வரக்கூடாது என்பது அவர்களுடைய வழக்கமாக உள்ளது. மேலும் ஒருசில சிறுதெய்வக் கோவில்களில் பிலியிடும் ஆட்டுக்கிடாயை அங்கேயே ஆண்கள் மட்டுமே சாப்பிட வேண்டும் பெண்கள் சாப்பிடக்கூடாது போன்ற சடங்கு முறைகளை மக்கள் இன்றளவும் பின்பற்றி வருகின்றனர் என்பது நோக்கத்தக்கது.

**திருமணச் சடங்குகள்**

ஒத்த பருவமுடைய ஆணையும் பெண்ணையும் இல்லற வாழ்க்கையில் வாழச் செய்வதற்கு இந்த சமூகத்தால் நடத்தப்பெறும் சடங்கு திருமணம் ஆகும். இத்திருமணமானது, திருமணத்திற்கு முன் நடைபெறும் சடங்கு, திருமணத்தன்று நடைபெறும் சடங்கு, திருமணத்தின் பின் நடைபெறும் சடங்கு என்று மூன்று வகையாக மேற்கொள்ளப்படுகிறது. பெண்பார்க்கும் நிகழ்வு, பெண்ணை மணமகனுக்குப் பிடித்துவிட்டால் பெண்ணுக்குப் பூவைக்கும் சடங்கு, கைநனைத்தல் என்று அழைக்கப்படும் சாப்பிடுதல் நிகழ்வு, பரிசம்போடுதல் நிகழ்வு, பெண் அழைப்பு நிகழ்வு என்று திருமணத்திற்கு முன்னும் அரசானிக்கால் நடுதல், உடன் பிறந்தவர்கள் மணமக்களுக்குக் காலில் மெட்டி அணிவித்தல், தாய்மாமன்கள் மணமக்களுக்கு மாலை அணிவித்துத் தாலி எடுத்துக் கொடுத்தல், தாலி கட்டிய பின்பு மண்பானைக்குள் காசு அல்லது மோதிரத்தைப் போட்டு மணமக்களை எடுக்கச் சொல்லுதல், மணமக்களை வீட்டிற்குள் உட்காரவைத்து ஒருவருக்கொருவர் மாற்றி பால்பழங்களை ஊட்டிவிடச் சொல்லுதல், ஊர் மந்தையிலுள்ள கிணற்றில் தண்ணீர் எடுக்கச் சொல்லுதல் என்று பல சடங்குகள் திருமணத்தன்று நடைபெறும். இன்றைய காலக்கட்டங்களில் மணமகள் வீட்டார் பெண்ணைக் கட்டிக்கொடுக்கும் போது மணமகனுக்குப் பொன்னும் பொருளும் கொடுத்துக் கட்டிக் கொடுக்க வேண்டிய சூழல் உள்ளது. இதனால் பல பெண்களுக்குத் திருமணம் செய்து கொடுக்க முடியாத நிலையில் அவர்கள் குடும்பத்தினர் உள்ளனர். ஆனால் சங்க

இலக்கியக் காலக்கட்டத்தில் மணமகன் மணமகள் வீட்டாருக்குப் பொன்னும் பொருளும் கொடுத்துத் திருமணம் முடித்த செய்தியை

"கடுங்கண் கோசர் நியமம் ஆயினும்
உறுமெனக் கொள்ளுநர் அல்லர்
தறுநுதல் அரிவை பரிசிழை விலையே"[4]

என்ற பாடலின் வழி மணமகன் பரிசம் போட்டுப் பெண்ணை மணந்த செய்தியைக் காணமுடிகிறது. தீய கோள்களின் தொடர்பு நீங்கிய ரோகினி நன்னாளில் அழகிய காலை நேரத்தில் உளுந்து தலைப்பெய்த விருந்து உணவு படைக்கப்பட்டு, பந்தற்கால் நட்டு, புதுமணற் பரப்பி மணப்பெண்ணை அழைத்துவந்து மணமகனிடம் ஒப்படைத்து கற்புநெறி வழுவாமல் மக்கட் செல்வங்களைப் பெற்று வாழ்க என்று வாழ்த்தினர் என்பதை,

"உழுந்து தலைப்பெய்த கொடுங்களி மிதவை
பெருஞ் சோற்று அமலை நிற்ப"[5]

என்ற அகநானூற்றுப் பாடல்வழி அறிய முடிகிறது. சங்க இலக்கியக் காலக்கட்டத்தில் தாலிகட்டும்வழக்கம் இல்லை என்பதையும் மேற்கண்ட பாடல்வழி அறியலாம். திருமணத்தில் தாய்மாமன் பங்கு மிக முக்கியமானதாகும். நிச்சயதார்த்தத்தின் போது தாம்பூலத் தட்டை மாற்றுதல், மணப்பெண்ணுக்கு மாலை அணிவித்தல் போன்ற சடங்குகளை தாய்மாமனே செய்வார். "கல்யாணத்தின் போது பொண்ணுப்பிள்ளையை மாமன் தூக்கும் சாங்கியம் ஒன்று உண்டு. தாய்மாமன் பெண்ணைத் தூக்கி வந்து மணவறையில் அமரவைக்க வேண்டும்"(அர்த்தநாரி,ப.26.) என்ற இச்சடங்கானது இம்மக்கள் வாழும் பகுதிகளில் காணப்படுகிறது. மணப்பெண்ணைத் தாய்மாமன் தூக்கி மணவறையில் அமரவைக்கும் சடங்கை வேறு எந்தப் பகுதியிலும் பெரும்பாலும் காணப்படவில்லை என்பது இங்கு ஒப்பு நோக்கத்தக்கதாகும்.

**வளைக்காப்புச் சடங்குகள்**

திருமணமாகி கருவுற்றப் பெண்ணுக்கு ஐந்து, ஏழு அல்லது ஒன்பதாம் மாதத்தில் வளைக்காப்புச் சடங்கு நடத்தப்படும். இச்சடங்கு குறித்து இப்புதினம், "கார்த்திகை மாதம் ஏழாவது. அம்மா வீட்டிலிருந்து வந்து கட்டுச்சோறு கட்டிப்போட்டு அழைத்துப் போவார்கள். அங்கே தான் பிரசவம்." (அர்த்தநாரி,ப.112.) என்று கூறுகிறது. மேலும் முதல் குழந்தைக்குப் பிரசவம் பார்த்தல் தாய்வீட்டில் தான் நடைபெறும். "மூன்று வகைக் கட்டுச்சோறு, புளிச்சோறு, தக்காளிச்சோறு, தயிர்ச்சோறு, கச்சாயமும் காரவடையும் எல்லாம் அவர்களே வந்து செய்தார்கள்.

*பட்டுப் புடவை ஒன்றும் எடுத்து வந்திருந்தார்கள். பொன்னாவுக்குப் பட்டுப் புடவைக் கட்டித் திண்ணையில் மணை போட்டு உட்கார வைத்தார்கள். காளியையும் பக்கத்தில் வந்து உட்காரச் சொன்னார்கள்" (அர்த்தநாரி,ப.115.) என்று வளைக்காப்புச் சடங்கு குறித்துக் காண முடிகிறது.*

*இச்சடங்கினை நோக்கும் பொழுது வளைக்காப்பு அன்று பெண்ணுக்கு கை நிறைய வளையல்கள் அணிவிப்பர். காரணம் வளையல் சத்தம் ஒலிக்கும் போதெல்லாம் கருவிலிருக்கும் குழந்தைக்கு அச்சத்தம் கேட்கும். இதனால் குழந்தைக்கு கவனிக்கும் திறன் அதிகரிக்கிறது என்ற தமிழர்களின் நுட்பமான அறிவினையும் காண முடிகிறது.*

**பிள்ளைப்பேற்றுச் சடங்குகள்**

*ஒரு பெண் பத்து மாதம் வலிகளுடன் சுமந்து குழந்தையைப் பெற்றெடுப்பதால் தாய் என்ற உன்னத நிலையை அடைகிறாள். குழந்தைப்பேறு இல்லையென்றால் அப்பெண்ணை இந்தச் சமூகம் மலடி என்று தூற்றும். பொதுவாக சமூகத்தில் நிகழும் நல்ல காரியங்களில் முன்னிறுத்தப்பட மாட்டார்கள். எனவே திருமணமான ஒவ்வொரு பெண்ணுக்கும் தாய்மை நிலை என்பது மிக முக்கியமான ஒன்றாகும். நாட்டுப்புறங்களில் அன்றைய காலத்தில் ஊருக்கு ஒரு மருத்துவச்சி இருந்து எல்லாப் பெண்களுக்கும் பிரசவம் பார்ப்பாள். சுகப்பிரசவத்துடன் குழந்தை பிறந்த பிறகு சில சடங்குகளை மேற்கொள்வர். இப்புதினத்தின் ஆசிரியர் விளக்கு முகம் காட்டுதல், கண்ணேறு கழித்தல் போன்ற சடங்குகளைப் பதிவு செய்திருக்கிறார்.*

**விளக்கு முகம் காட்டும் சடங்கு**

*குழந்தை பிறந்து ஒரு மாதம் கழித்து, விளக்கேற்றி அதன் ஒளியை குழந்தையின் முகத்தில் படுமாறு செய்வதே விளக்கு முகம் காட்டும் சடங்காகும்.. "குழந்தை பிறந்து ஒரு மாதம் ஆகிவிட்டது என்று சொன்னாள் சீராயி. இன்னைக்கு வெளக்கு முகத்த கொழந்தைக்குக் காட்டோணும் என்று சொல்லி ஏதேதோ செய்து கொண்டிருந்தாள்."(அர்த்தநாரி,ப.175.) என்ற கருத்தின் வழி இச்சடங்கினை ஆசிரியர் புலப்படுத்துகிறார்.பிறந்த குழந்தைக்குப் பார்வைத்திறன் சரியாக இருக்கிறதா என்பதை சோதித்தறிய இந்தச் சடங்கை அவர்கள் பயன்படுத்தியிருக்கலாம் என்று ஊகித்தறியலாம். மேலும் இதை ஒருமங்களகரமான சடங்காகக் கருதினார்கள்.*

**கண்ணேறு கழித்தல் சடங்கு**

*கண்களின் பார்வைக்கு சக்தி உண்டு. ஒருவரை நாம் எந்த எண்ணத்தோடு பார்க்கிறோம் என்ற தன்மை உண்டு. கெட்ட எண்ணங்களோடு ஒருவரைப் பார்த்தால் அவர்களுக்குத் தீங்கு விளையும் என்ற நம்பிக்கை உண்டு. இதனை கண்திருஷ்டி என்று கூறுவர். 'கல்லடிபட்டாலும் சொல்லடி படக்கூடாது, விண்ணேறு தப்பினாலும் கண்ணேறு தப்பாது' போன்ற சொல்லாடல்கள் மக்களிடையே வழக்கத்தில் காணப்பட்டன.*

*" பண்ணேறு மொழியடியார் பரவி வாழ்த்தும்*
*பாதமலர் அழகினைப் பாவி பார்க்கின்*
*கண்ணேறு படுமென்றோ கனவி லேனும்"*[6]

*இறைவனுடைய திருவடியைப் பார்த்தால் இறைவனுக்குக் கண்ணேறு பட்டுவிடும் என்று வள்ளலார் கூறுகிறார். கண்ணேறு கழிக்க குழந்தைகளுக்குச் சுத்திப்போடுதல், மணமக்களுக்கு ஆரத்தி எடுத்தல், வீடுகளுக்குப் பூசணிக்காய் கட்டித் தொங்க விடுதல், திருஷ்டி பொம்மைகளை வாங்கி மாட்டுதல், வாகனங்களுக்கு எழுமிச்சை, கறுப்புக்கயிறு கட்டுதல் போன்ற செயல்ளைச் செய்வர். இவ்வகையில் இப்புதினத்தில் "ஊர்க்கண்ணும் உற்றார் கண்ணும் மூளிக்கண்ணும் முண்டைக் கண்ணும் பாதிப்பதை விட தாய்க்கண்ணும் தகப்பன் கண்ணுமே ரொம்ப திருஷ்டி. தன் கண்பட்டு அவனுக்கு எந்தப் பாதிப்பும் வந்துவிடக் கூடாது என அன்றைக்கு மிளகாய் சுற்றிப் போட்டாள்."(அர்த்தநாரி,ப.30.) என்ற சடங்கு நிகழும் முறையைக் காணமுடிகிறது. மிளகாய் சுற்றி நெருப்பில் போடும் பொழுது அது பொரிந்து மூக்கிலேறும். அதை வைத்து எவ்வளவு கண் திருஷ்டி பட்டது என்பதைக் கணிப்பர்.*

***காதணிவிழாச் சடங்குகள்***

*குழந்தைகளுக்குக் கெட்ட சக்திகளால் எந்தத் தீங்கும் நேரக்கூடாது என்பதற்காக காது குத்துவார்கள். காதணிவிழா வைப்பதற்கு முன்பு தாய்மாமன் வீட்டுக்குச் சென்று கெடு கேட்டல் என்ற நாள் குறித்தல் சடங்கு நடைபெறும். குழந்தைகளுக்கு வீட்டிலோ அல்லது குல தெய்வக் கோவிலிலோ தாய்மாமன் மடியில் உட்கார வைத்து காதுகுத்தும் சடங்கு நடைபெறும். "நாளைக்கு மாமன் மடியில கொழந்தய உக்கோர வெச்சுக் காது குத்துவம். அப்ப நீ கம்பீரமா மாமன்னு நிக்க வேண்டாமா?"(அர்த்தநாரி,ப.151.) என்பதன் வழி காதணிவிழாச் சடங்கு முறையினைக் காண முடிகிறது.*

*காதணிவிழா மற்றும் திருமணவிழாவில் தாய்மாமன் இல்லாமல் எந்தச் சடங்கும் நடக்காது என்பதை இக்கருத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம்.*

***இறப்புச் சடங்கு***

*மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் என்றாவது ஒருநாள் இவ்வுலக வாழ்வைவிட்டு இறக்க நேரிடும். இறந்தபின் அவர்களுக்குச் செய்ய வேண்டிய சடங்குகளை முறையாகச் செய்து அடக்கம் செய்வர். இறந்தவர்களுக்கு வாய், கை கட்டும் சடங்கு, பேரப்பிள்ளைகளை நான்கு மூலைகளில் நிற்க வைத்து நெய்ப்பந்தம் பிடிக்கச் சொல்லுதல், புதைப்பதற்கு முன்பு வாய்க்கரிசி போடுதல், மகனுக்கு மொட்டை அடித்து மும்முறை சுற்றிவந்து இறுதிக் காரியம் செய்தல் என்று பல்வேறு சடங்குகள் பின்பற்றப் படுகின்றன. இதனைப் புதின ஆசிரியர்,*

*“நாளைக்கு நான் போயிச் சேர்றப்ப நெய்ப்பந்தம் புடிக்க எம் பேரன் பேத்தின்னு சொல்லிக்க ஒன்னாச்சும் வேணும்னு எனக்கு ஆசைடா.” (அர்த்தநாரி,ப.33.)* என்று எடுத்துரைக்கிறார். பிள்ளை வயிற்றுப் பேரன் பேத்திகளே நெய்ப்பந்தம் பிடிப்பார்கள். அவ்வாறு இல்லாத பட்சத்தில் பங்காளி வகையறாவைச் சார்ந்த பேரப் பிள்ளைகள் நெய்ப்பந்தம் பிடிப்பார்கள். ஒருசில இடங்களில் நெய்ப்பந்தத்திற்குப் பதிலாக ஊதுபத்தி பிடிக்கும் வழக்கம் காணப்படுகிறது.

**பொங்கல் விழாச் சடங்குகள்**

தமிழ்நாடு, இந்தியாவின் பிறபகுதிகள், மற்றும் உலகெங்கிலும் உள்ள தமிழர்கள் சமயம் கடந்து அனைவராலும் கொண்டாடப்படும் ஒரு பண்டிகையாகப் பொங்கல் உள்ளது. நிலத்தை உழுது பயிரிட்டு ஆறுமாத உழைப்பிற்குப்பின் அறுவடை செய்து அந்தப் புது அரிசியில் பொங்கல் வைத்து, பயிர் விளைவதற்குப் பயன்பட்ட மாடுகளுக்கும், உழவுக் கருவிகளுக்கும் இயற்கைக்கும் நன்றி தெரிவிக்கும் விழாவே பொங்கல் விழாவாகும். தமிழ் இலக்கியங்களில் பொங்கல் விழாவைப் பற்றியப் பதிவுகள் காணப்படுகின்றன.

*“வாண்கேழ் இரும்புடை கழாஅது ஏற்றிச்*
*சாந்த விறகின் உவித்த புன்கம்”*[7]

உழாமலேயே தினையை விதைத்து அதன் தாள்களை உண்ட பசுவின் பாலை உலையாக வைத்து அதில் மான் கறியை இட்டுச் சந்த விறகால் அடுப்பெரித்துப் பொங்கல் வைத்துச் சாப்பிட்டனர் என்ற செய்தியைப் புறநானூற்றுப் பாடல்வழி அறிய முடிகிறது.

*“புழுக்கலும் நோலையும் விழுக்குடை மடையும்*
*பூவும் புகையும் பொங்கலும் சொரிந்து”*[8]

என்ற அடிகளின் மூலம் பொங்கல் வைத்துச் சடங்குகள் செய்ததை சிலப்பதிகாரம் மூலம் அறியலாம். ‘பொங்கல்’ என்ற வார்த்தையை திருத்தக்கத் தேவரும்

*“மதுக்குலாம் அலங்கல் மாலை மங்கையர் வளர்த்த செந்தீப்*
*புதுக்கலத்து எழுந்த தீம்பால் பொங்கலின் நுரையின் பொங்கி”*[9]

என்ற அடிகளின் மூலம் சீவக சிந்தாமணியில் குறிப்பிடுகிறார். தை இரண்டாம் நாள் மாட்டுப் பொங்கலாகக் கொண்டாடப்படுகிறது. அன்றைய தினம் மாடுகளைக் குளிப்பாட்டிக் கொம்புகளுக்கு வண்ணம் தீட்டி உடம்பில் வண்ணப் பொடிகளால் பொட்டிட்டு அலங்காரப் படுத்துவர். மாட்டுப்பட்டியை சுத்தம் செய்து மாலை நேரத்தில் பொங்கல் வைப்பர். கூம்பு வடிவக் கற்களை எடுத்து நன்றாகக் கழுவிப் பொட்டிட்டு சாமியாக நிலத்தில் ஊன்றி வைப்பர். கரும்பை இரண்டு பக்கமும் நிலத்தில் ஊன்றி அதன் தாள்களை மேலே முடித்து வைப்பர். பூளைப்பூக்களைக் கயிறாகத் திரித்து கரும்பின் இடையில் கட்டிவிடுவர். சாமிக்கு முன் சிறுகுழி பறித்துத் தண்ணீர்

*ஊற்றி அதில் நவ தானியங்களைப் போடுவர். மாடுகளுக்கு ஒருவர் சாம்பிராணிப் புகையைக் காட்ட, ஒருவர் தண்ணீர் தெளிக்க, மற்றொருவர் மாடுகளுக்குப் பொங்கலை ஊட்டி விடுவார்.இவ்வகையில் பொங்கல் விழாச் சடங்குகள் குறித்த செய்தி இப்புதினத்தில் இடம்பெறுகிறது.*

*“சாமி கும்பிடும் முன் மாடுகளுக்கு ஆடுகளுக்கு எல்லாம் சாம்பிராணிப் புகை காட்டப் போனான் காளி.”(அர்த்தநாரி,ப.123.)*

*“நீர் விளாவிக் கற்பூரம் பற்ற வைத்துக் காட்டினான். எல்லாரும் கும்பிட்டார்கள். படைப்புச் சோற்றை எடுத்துக் காளி கையில் கொடுத்தாள் சீராயி. மாடுகளுக்கு ஊட்டப் போனான் அவன். எருதுகள் இரண்டும் சோற்றை விரும்பிச் சாப்பிடும்.”(அர்த்தநாரி,ப.125.) என்று கூறுவதன் வழியாக பொங்கல் சடங்கினை மக்கள் கொண்டடும் முறையைப் பற்றி ஆசிரியர் பேசுகிறார். ‘காஞ்சபய கார்த்திகை வந்து என்னாவுது; தீஞ்சபய தீபாவளி வந்து என்னாவுது; மகராசன் பொங்கல் வந்தா மனங்கோணாம சோறு கிடைக்கும்’ என்று பொங்கல் விழா குறித்து மாடுகள் நினைப்பதாக மக்களிடையே சொல்லாடல் உண்டு. இதன் மூலம் பொங்கலின் மகத்துவத்தை அறியமுடிகிறது.*

**முடிவுரை**

*நாட்டுப்புற மக்களின் பிறப்பு முதல் இறப்பு வரை அவர்கள் வாழ்வியலோடு சடங்குகள் ஒன்றிணைந்து காணப்படுகின்றன. இம்மக்களின் வாழ்வோடு ஒன்றிணைந்துள்ள சடங்குகள் அவர்களைப் பாதுகாப்பதாகவும், வழிநடத்துவதாகவும் அமைகின்றன என்று நம்புகின்றனர். பல சடங்குகள் எல்லாப் பகுதியிலுள்ள மக்களோடு பொருந்துவதாகவும் ஒருசில சடங்குகள் அம்மக்கள் வாழக்கூடிய பகுதிக்கே உரிய தனித்தன்மையாகவும் விளங்குவதைக் காணமுடிகிறது. அறிவியல் வளர்ச்சி நாட்டுப்புற மக்களின் வாழ்க்கை முறையைப் பல வகையில் மாற்றி அமைத்தாலும் இன்னும் அவர்கள் நாட்டுப்புறச் சடங்குகளை வழிவழியாகப் பின்பற்றி வருகின்றனர். நாட்டுப்புற மக்களின் வாழ்வியலையும் மரபுவழிப் பண்பாடுகளையும் அறிந்துகொள்ள சடங்கு முறைகள் பெரிதும் பயன்படுகின்றன என்பதை இக்கட்டுரை வழி விளக்கப்பட்டுள்ளது.*

**சான்றெண் விளக்கம்**

*1.சு.சக்திவேல்,நாட்டுப்புற இயல் ஆய்வு,ப.190.*

*2. மேலது, ப.190.*

*3.மேலது, ப.24.*

*4.புலியூர்க்கேசிகன்(உ.ஆ), அகநானூறு,பா.90:12-14.*

*5.புலியூர்க்கேசிகன்(உ.ஆ), அகநானூறு,பா.8:1-4.*

6.சன்மார்க்க தேசிகன் ஊரன் அடிகள்,திருவருட்பா(மு.தி),ஜீவசாட்சிமாலை,பா.1:1-3.

7.புலியூர்க்கேசிகன்(உ.ஆ),புறநானூறு,பா.168:10-11.

8. புலியூர்க்கேசிகன்(உ.ஆ), சிலப்பதிகாரம்(இ.ஊ.எ.காதை), வரி. 68-69.

9.ஞா.மாணிக்கவாசகம்(உ.ஆ),சீவகசிந்தாமணி பா.1821:1-2.

**துணைநூற் பட்டியல்**

1.பெருமாள் முருகன், அர்த்தநாரி,காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில் -01.நான்காம் பதிப்பு-2020.

2. சு.சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை-08. எட்டாம் பதிப்பு 2009.

3. சு.சண்முகசுந்தரம், நாட்டுப்புறவியல்,காவ்யா பதிப்பகம், சென்னை -24.இரண்டாம்பதிப்பு – 2007.

4.தொ.பரமசிவன், பண்பாட்டு அசைவுகள், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில்-01. பன்னிரண்டாம் பதிப்பு – 2014.

5.ந.முருகேசபாண்டியன்,கிராமத்து தெருக்களின் வழியே, டிஸ்கவரி புக் பேலஸ்,சென்னை-78. முதல் பதிப்பு – 2017.

6.புலியூர்க்கேசிகன்(உ.ஆ), அகநானூறு மூலமும் உரையும்,சாரதா பதிப்பகம்,சென்னை-14. முதல் பதிப்பு – 2010.

7.சன்மார்க்க தேசிகன், ஊரன் அடிகள்(ப.ஆ)திருவருட்பா, சன்மார்க்க ஆராய்ச்சி நிலையம்,வடலூர்-03.

8.புலியூர்க்கேசிகன்(உ.ஆ), புறநானூறு மூலமும் உரையும், சாரதா பதிப்பகம்,சென்னை-14. முதல் பதிப்பு – 2010.

9. புலியூர்க்கேசிகன்(உ.ஆ), சிலப்பதிகாரம் மூலமும் உரையும், சாரதா பதிப்பகம்,சென்னை-14. முதல் பதிப்பு – 2010.

10.ஞா.மாணிக்கவாசம்(உ.ஆ), சீவக சிந்தாமணி மூலமும் உரையும், உமா பதிப்பகம்,சென்னை-01. முதல் பதிப்பு – 2007.